நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 90 /2025

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(புகார்தாரர் தரப்பு சாட்சி**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜு |
| கிராமம் | : | ஆண்டிக்கவுண்டனூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 49 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், டிசம்பர் மாதம், 01–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.00PM.

1. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்கமூலத்தில் நான் கைமாற்று கடனாகத்தான் கொடுத்தாகவும் , வட்டி கொடுத்தாக குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். அவராகத்தான்வந்து என்னிடம் முதல் மாதம் 10,000/–த்தை கொடுத்துவிட்டு ஏதோ ஒரு கணக்கில்வைத்து கொள்ளுங்கள் என்று கொடுத்தார். அதன்பிறகும்

இரண்டாவது மாதம் ரூபாய்.10,000/- கொடுத்தார்.

2. நான் கொடுத்த ரூபாய். 9,50,000/- பணத்தில் நான் பெற்று கொண்ட ரூபாய்.20,000/- போக ரூபாய். 9,30,000/-தான் தரவேண்டும் என்றால் சரியல்ல. அசலுக்கு கொடுப்பதாக சொல்லி என்னிடம் கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் பணமே வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனது நிதிநிறுவனத்தில் ஏலச் சீட்டு நடத்துவதில்லை. எனது நிதிநிறுவனத்தில் ஏலச்சீட்டு நடத்துகிறேன் என்றாலும், அந்த ஏலச்சீட்டில்தான் எதிரி ஒரு உறுப்பினராக இருந்தார் என்றாலும் சரியல்ல.

3. மேற்படி 20,000/-பணத்தை ரொக்கமாகத்தான் கொடுத்தார் என்றால் சரிதான். இந்த பண பரிவர்த்தனைக்கு முன்பாக எதிரிக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை. நான் சொல்வது பொய் என்றாலும், எதிரி எனக்கு மாதம்மாதம் சீட்டு பணம் ரொக்கமாகவும், வங்கி கணக்கு மூலமாகவும் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4. மேற்படி ஏலச்சீட்டு எடுத்தபோது அந்த தொகைக்கு ஆதரவாக இரண்டு காசோலைகள் இரண்டு பிராமிசரி நோட்டுகள், ரெவன்யு ஸ்டாம் ஒட்டிய பச்சை நிற தாள் ஆகியவற்றில் கையொப்பம் வாங்கி நான் பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு வாங்கவில்லை. கடந்த முறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதாக நான் சொன்ன ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அதை தேடித்தான் பார்க்கவேண்டும்.

5. காசோலையில் உள்ள விவரங்களை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரி எழுதி வந்து கொடுத்தார். என்னிடம் உள்ள மற்றொரு காசோலை எந்த வங்கியில் இருந்து பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. அதனுடைய காசோலை எண் என்ன என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சட்ட அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டும், ஏலச்சீட்டு தவணை தொகையாக இரண்டு மாதம் தலா ரூபாய்.12,000/- வீதம் ரூபாய்.24,000/- கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

6. 25.04.2024ம் தேதி எதிரி என்னுடைய வங்கி கணக்கிற்கு எதிரியின் வங்கி

கணக்கில் இருந்து ஜிபே மூலம் ரூபாய். 15,000/- அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல. 17.03.2024ம் தேதி எதிரி என்னுடைய வங்கி கணக்கிற்கு ரூபாய். 10,000/- ஜிபே மூலம் எனக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றால் அனுப்பியதாக எனக்கு ஞாபகமில்லை.

7. எதிரி நான் சொன்னவாறு கடனே வாங்கவில்லை என்றாலும், ஏலச்சீட்டு என்பதால் தான் 2024ம் ஆண்டு முதலே எனக்கு பணம் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. இன்னும் அந்த ஏலச்சீட்டில் 11 மாதம் மட்டுமே மீதம் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி எதிரிக்கு பணம் கொடுத்ததை நான் நடத்தி வரும் நிதிநிறுவன கணக்கில் நான் காட்டவில்லை. நான் என்னுடைய தனிப்பட்ட பணத்தை தான் கொடுத்தேன்.

8. ஸ்ரீ சாய்ராம் பைனான்ஸ் நிறுவனத்தில் நான் பங்குதாரராக இருந்தேன் அதன்பிறகு உடல் நிலை சரியில்லாததால் பைனான்ஸ் கம்பெனியை விட்டு விட்டு வந்தேன்.நான் பிரிந்து எனது பங்கை பெற்று கொண்ட 2022ம் வருடம் முதல் நான் மேற்படி பைனான்ஸில் கணக்கு வழக்கு பார்க்கும் வேலையை பார்த்து வருகிறேன். நான் பிரிந்த பிறகு மீதமுள்ள ராஜசேகர், வடிவேல், செல்வம் ஆகிய மூவரும் அந்த நிதிநிறுவனத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். 2022ம் ஆண்டு முதல் நான் நிதிநிறுவனம் நடத்துவதில்லை.

9. நான் தனிப்பட்ட முறையில் பட்டய கணக்காளர் வைத்து வரவு செலவு கணக்கு பராமரிக்கவில்லை. எனக்கு அந்த அளவுக்கு வருமானம் இல்லை. மேற்படி பைனான்ஸில் கணக்கு வழக்கு பார்ப்பதற்காக மாதம் ரூபாய். 5,000/- சம்பளமாக கொடுக்கிறார்கள்.2022ம் ஆண்டு முதலே நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை . எனக்கு உடல்நிலை சரியில்லை. மேற்படி 5,000 போக எனது அம்மாவிற்கு வரும் ரூபாய். 20,000/- ஓய்வுதிய தொகையில் இருந்து தான் நான் குடும்பம் நடத்தி வருகிறேன்.

10. 2022ம் ஆண்டு முதல் நான் சிரமப்பட்டு தான் நான் குடும்பம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனக்குசொந்த வீட்டை தவிர வேறு சொத்துக்கள் எதுவும்

கிடையாது. எனது வங்கி கணக்கில் 2022ம் வருடம் முதல் நிரந்தர வைப்பீடு எதுவும் இல்லை. எனது வங்கி கணக்கில் ரூபாய். 2,000 அல்லது ரூபாய். 3,000/– தான் வங்கி கணக்கில் இருக்கும். எதிரி சீட்டு போட்ட வகையில் மேற்படி நிதிநிறுவனத்திற்குதான் பணம் தரவேண்டும் என்றாலும், நானும் அந்த நிதிநிறுவனத்தில் ஒரு பங்குதாரர் என்றாலும், எதிரி என்னிடம் இருந்து எந்த தொகையும் கடனாக வாங்கவில்லை என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.44PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**